# மியாட் மருத்துவமனை 15-வது ஆண்டு விழா

■சென்னை

சென்னை மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையின் 15-வது ஆண்டு விழா புதன்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவுக்கு மருத்துவமனை நிறுவனரும், நிர்வாக இயக்குநருமான பி.வி.ஏ.மோகந்தாஸ் தலைமை தாங்கினார். மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகந்தாஸ், இணை இயக்குநர் பிரித்வி மோகந்தாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட செசல்ஸ் நாட்டின் துணை அதிபர் ரோலன் டேனி ஆண்டோனி பரே விழாவை தொடங்கி வைத்து பேசுகையில், "இந்த மருத்துவமனையின் வளர்ச்சிக்கு டாக்டர்கள், நர்ஸ்கள் மற்றும் பணியாளர்களே காரணம். எங்கள் நாட்டு டாக்டர்கள், மாணவர்கள் இந்த மருத்துவமனையில் பயிற்சி பெறுகின்றனர். மியாட் மருத்துவமனை, எங்களுடைய நாட்டில் மருத்துவப் பல்கலைக்கழகத்தை தொடங்க வேண்டும்" என்றார்.

மருத்துவமனை நிர்வாக இயக்குநர் பி.வி.ஏ.மோகந்தாஸ் பேசுகையில், "இந்த மருத்துவ மனை 1999-ம் ஆண்டில் 100 படுக்கைகளுடன் சிறியதாக தொடங்கப்பட்டது. ஆனால், தற்போது 1,000 படுக்கைகளுடன் மல்டி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக வளர்ச்சி அடைந்துள்ளது. 129 நாடுகளைச் சேர்ந்த மக்கள் மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர்" என்றார்.